©
GOVERNMENT OF TAMIL NADU
2008

[Regd. No. TN/CCN/117/2006-08.
[Price : Rs. 3.20 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 41B] CHENNAI, WEDNESDAY, OCTOBER 22, 2008
Aippasi 6, Thiruvalluvar Aandu–2039

## Part VI—Section 2

**(Supplement)**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION

**TNERC (Procedure for payment of subsidy by the State Government) Regulations, 2008**

**(Notification No. TNREC/PPS/17 / dated 22-09-2008)**

*[Letter No. TNERC/AD(L)/F.Notifications/D1394/2008.]*

No. VI(2)/782/2008.

Whereas, under Section 65 the Electricity Act, 2003, (Central Act 36 of 2003) the State Electricity Regulatory Commission shall specify the manner of payment of subsidy by State Government, in case the State Government requires grant of subsidy to any consumer in the tariff determined by the Commission and it is felt necessary to frame Regulations for the above purpose;

And whereas, the Regulations providing for the manner of payment of subsidy by the State Government shall be subject to previous publication and accordingly undergone previous publication;

Now, therefore, under Section 65 of the said Electricity Act, 2003, read with clause (zp) of sub-section (2) of Section 181 thereof and all other powers enabling it in this behalf, the Tamil Nadu Electricity Regulatory Commission hereby makes the following regulations, namely :—

**1. Short Title and Commencement :**

(i) These Regulations may be called the TNERC(Procedure for payment of subsidy by the State Government) Regulations, 2008.

(ii) These Regulations shall come into force on the date of their publication in the *Tamil Nadu Government Gazette.*

**2. Definitions :**

(i) 'Act' means the Electricity Act, 2003(Central Act 36 of 2003);

(ii) 'beneficiary' means any consumer or class of consumers who is granted subsidy by the State Government under Section 65 of the Act;

(iii) 'Commission' means the Tamil Nadu Electricity Regulatory Commission;

(iv) 'GOTN' means the State Government of Tamil Nadu;

(v) 'person' shall include any company or body corporate or association or body of individuals, whether incorporated or not or artificial juridical person;

(vi) 'subsidy' means any direct financial grant by the GOTN to compensate any person affected by waiver or exemption or reduction directed by the GOTN in tariffs as determined by the Commission under Section 62 of the Act;

(vii) Unless the context otherwise requires, the words and expressions in these Regulations, and not defined herein; but defined in other Regulations published by the Commission or in the Act shall bear the same meaning assigned to such terms in the Regulations or the Act.

**3. Intent of these Regulations :**

The intent of these Regulations is to define subsidy, the method of its computation, the manner in which it shall be paid by the GOTN, the person eligible to receive subsidy and consequences of delays or non receipt of subsidy by the concerned person.

**4. Subsidy and manner of payment :**

(i) The GOTN, if it desires to grant any subsidy, shall inform the Commission, through policy direction, and the distribution licensees of its decision along with the relevant details. The communication from the GOTN to the Commission conveying its decision shall clearly identify the beneficiaries, the quantum of consumption proposed to be subsidised and the per unit subsidy to be provided. The amount of subsidy shall be computed by multiplying the quantum of consumption to be subsidised by the subsidy per unit committed by the GOTN to the distribution licensees. Where the Commission has ordered collection of monthly minimum, such minimum shall be taken into account while computing the total subsidy. The Commission shall, by order, fix a schedule of payment of the subsidy in advance by the GOTN.

(ii) In case the GOTN desires that the subsidy is to be factored in, while determining the tariff for the ensuing year, it shall direct the distribution licensees to estimate the total financial support necessary for the ensuing year for implementing the decision of the GOTN and intimate the same to the Commission and the GOTN latest by 30th November of each year.

(iii) In case the communication regarding subsidy to be factored in the tariff for the ensuing year is not received before 30th November of the current year, or along with tariff petition, the Commission would go ahead with the determination of retail tariff for the ensuing year without considering the subsidy and thereafter, the GOTN can provide subsidy to any consumer or class of consumers in the tariff determined by the Commission.

**5. Manner of Payment of Subsidy by State Government :**

(i) The distribution licensee shall charge the susidised tariff to a consumer or class of consumers for whom the GOTN has committed the subsidy, subject to release of subsidy in advance.

(ii) The subsidy shall be payable by the GOTN to the distribution licensee in advance as below as per the following schedule of payment ordered by the Commission :—

| | |
|---|---|
| Domestic consumers | : Monthly |
| Agricultural & Hut consumers | : Half Yearly |
| Other consumers | : Quarterly |

(iii) The GOTN shall provide the subsidy to the distribution licensee, in cash, in advance. If the GOTN desires to adjust the subsidy payable towards concessional or free supply against any dues from the distribution licensee to GOTN, it can be done with the prior approval of the Commission.

(iv) The distribution licensee shall provide quarterly information to the Commission and to the GOTN, of the subsidy claimed and the subsidy received in advance from the GOTN.

(v) As on date of commencement of these Regulations, if there are any arrears (principal and interest), payable by any consumer or class of consumers towards the tariff and the same is waived off by the GOTN, the GOTN shall make good the distribution licensee such amounts within three months from the date of waiver.

(vi) The arrears of revenue from tariff waived off by the GOTN and remaining unpaid in the books of accounts of the distribution licensee, shall be cleared by the GOTN, through release of additional subsidy, within one year of the date of coming into force of the Regulations.

(vii) The distribution licensee shall reconcile the actual subsidy received with actual consumption within six months from the close of the financial year and send proposal for adjustment of subsidy. The Commission may approve the final subsidy.

**6. Consequences of non payment, partial payment or excess payment of Subsidy :**

(i) In case subsidy is not received as per the schedule of payment ordered by the Commission in advance under regulation 4(i), the distribution licensee shall charge the consumers at the tariff determined by the Commission.

(ii) The distribution licensee, while raising the bill on the consumer, shall clearly indicate in each bill (a) the amount payable as per the tariff determined by the Commission (b) the amount of subsidy paid by the GOTN and (c) the net amount payable by the consumer for the billing period.

(iii) After reconciliation of actual consumption with subsidy. If it is found that the subsidy paid by the GOTN is less than the actual subsidy as finally determined by the commission, the GOTN shall pay the same along with the next release after the Commission's Order on final subsidy. In case the subsidy actually paid is excess, the GOTN shall adjust the same in the next release.

**7. Power to Amend :**

The Commission, either *suomotu* or on an application by any person or by distribution licensee or by any consumer, may at any time add, vary, modify or amend any provisions of these Regulations.

**8. Savings :**

(i) Nothing in these Regulations shall be deemed to limit or otherwise affect the inherent power of the Commission to make such orders as may be necessary to meet the ends of justice or to prevent abuse of the process of the Commission.

(ii) Nothing in these Regulations shall bar the Commission from adopting, in conformity with the provisions of the Act, a procedure, which is at variance with any of the provisions of these Regulations, if the Commission, in view of the special circumstances of a matter or class of matters and for reasons to be recorded in writing, deems it necessary or expedient for dealing with such a matter or class of matters.

(iii) Nothing in these Regulations shall, expressly or impliedly, bar the Commission dealing with any matter of exercising any power under the Act, for which no Regulations have been framed, and the Commission may deal with such matters, powers and functions in a manner as it thinks fit.

Chennai-600 018,
10th October 2008.

R. BALASUBRAMANIAN,
*Secretary*
*Tamil Nadu Electricity Regulatory Commission.*

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மாநில அரசால் உதவித்தொகை வழங்குவதற்கான நடைமுறை) ஒழுங்குமுறை விதிகள்**

**அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ /PPS/17/ 22–09–2008 நாளிட்டது.**

*[Letter No. TNERC/AD(L)/F.Notifications/D1394/2008.]*

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 36/2003) 65 ஆம் பிரிவின்படி மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் நிர்ணயிக்கப்படும் மின் கட்டண வீதத்தில் நுகர்வோர் எவருக்கும் உதவித்தொகை வழங்க மாநில அரசு கோரும் நேர்வில், மற்றும் அது, மேலேயுள்ள நோக்கத்திற்காக ஒழுங்குமுறைவிதிகளை இயற்றுவது அவசியமெனக் கருதும் நேர்வில், மாநில அரசால் உதவித்தொகை வழங்கும்முறையை ஆணையம் குறித்துரைத்தல் வேண்டும் என்பதாலும்,

மற்றும் மாநில அரசால் உதவித் தொகை வழங்கப்படும் முறைக்கு வகை செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, மேற்சொன்ன 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 65ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ழ) கூறின்படியும், இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களின்படியும் தமிழ்நாடு மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன்மூலம் பின்வரும் ஒழுங்குமுறைவிதிகளைச் செய்கிறது, அதாவது :

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(i) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மாநில அரசால் உதவித் தொகை வழங்குவதற்கான நடைமுறை) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்பெறும்.

(ii) இந்த ஒழுங்குமுறைவிதிகள், அவை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. பொருள் வரையறைகள் :**

(i) ''சட்டம்'' என்பது, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டம் (மத்தியச் சட்டம் 36/2003) என்று பொருள்படும் ;

(ii) ''பயனாளி'' என்பது, சட்டத்தின் 65ஆம் பிரிவின்படி மாநில அரசால் உதவித் தொகை வழங்கப்படுகிற நுகர்வோர் அல்லது நுகர்வோரின் வகையினர் எவரும் என்று பொருள்படும் ;

(iii) ''ஆணையம்'' என்பது, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் என்று பொருள்படும் ;

(iv) ''தமிழ்நாடு அரசு'' என்பது, தமிழ்நாடு மாநில அரசு என்று பொருள்படும் ;

(v) '' நபர் '' என்பது, நிறுமம் அல்லது கூட்டமைப்பு அல்லது கழகம் அல்லது தனி நபர்களின் குழு, அது கூட்டு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் சரி அல்லது இல்லாவிடினும் சரி அல்லது செயற்கை நீதித் துறை நபர் எவரையும் உள்ளடக்கும்.

(vi) ''உதவித் தொகை'' என்பது, சட்டத்தின் 62ஆம் பிரிவின்படி ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்டவாறான மின் கட்டணவீதத்தில் தமிழ்நாடு அரசால் உத்தரவிடப்பட்ட கைவிடுதல் அல்லது விலக்களிப்பு அல்லது குறைப்பு மூலம் பாதிக்கப்பட்ட நபர் எவருக்கும் ஏற்படும் நஷ்டஈட்டிற்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் நேரடியான நிதியுதவி எதுவும் என்று பொருள்படும் ;

(vii) சூழ்நிலை வேறு பொருள் குறித்தாலன்றி, இந்த ஒழுங்குமுறைவிதிகளிலுள்ள மற்றும் இதில் பொருள்வரையறை செய்யப்படாத, ஆனால், ஆணையத்தினால் வெளியிடப்பட்ட பிற ஒழுங்குமுறைவிதிகளில் அல்லது சட்டத்தில் பொருள்வரையறை செய்யப்பட்ட சொற்கள் மற்றும் சொற்றொடர்கள், அத்தகைய சொற்றொடர்களுக்கு இந்த ஒழுங்குமுறைவிதிகளில் அல்லது சட்டத்தில் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளை கொண்டிருக்கும்.

**3. இந்த ஒழுங்குமுறை விதிகளின் நோக்கம் :**

இந்த ஒழுங்குமுறைவிதியின் நோக்கமானது, உதவித்தொகை, அதனைக் கணக்கிடும் முறை, தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் முறை, உதவித்தொகையைப் பெறுவதற்குத் தகுதியுடைய நபர், மற்றும் காலத்தாழ்வின் விளைவு அல்லது சம்பந்தப்பட்ட நபரால் உதவித்தொகை பெறாமை ஆகியவற்றை வரையறுத்தல் ஆகும்.

**4. உதவித் தொகை மற்றும் வழங்கும்முறை :**

(i) தமிழ்நாடு அரசு, உதவித் தொகை எதனையும் வழங்க விரும்புமாயின், ஆணையத்திற்கு, கொள்கைப்படியான உத்தரவு மூலம் மற்றும் தொடர்புடைய விவரங்களுடன் சேர்த்து தன்னுடைய முடிவினை ஆணையத்திற்கும் மற்றும் மின் பகிர்வு உரிமம்தாரர்களுக்கும் அது தெரிவித்தல் வேண்டும். ஆணையத்திற்கு தன்னுடைய முடிவைத் தெரிவிக்கும் தமிழ்நாடு அரசின் செய்தியானது, பயனாளிகளை, உத்தேசிக்கப்பட்டவாறு உதவித்தொகை வழங்கப்பட வேண்டிய நுகர்வின் அளவு மற்றும் வழங்கப்படவேண்டிய யூனிட் ஒன்றுக்கான உதவித் தொகை ஆகியவை தெளிவாகச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். உதவித்தொகையின் அளவு, மின் பகிர்வு உரிமம்தாரர்களுக்கு, தமிழ்நாடு அரசால் யூனிட் ஒன்றுக்கு உதவித் தொகை மூலம் வழங்கப்படவேண்டிய நுகர்வின் அளவு பெருக்குதல் மூலம் கணக்கிடப்படுதல் வேண்டும். ஆணையம், மாதாந்திரமாக குறைந்தபட்சத்தொகை வசூலிப்பதற்கு ஆணையிட்டுள்ளவிடத்து, அத்தகைய குறைந்தபட்சத்தொகை, மொத்த உதவித்தொகையைக் கணக்கிடுகையில், கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஆணையம், ஆணையின் மூலம், தமிழ்நாடு அரசால் முன்னதாக உதவித் தொகை வழங்குவதற்கான குறித்த காலத்தை நிர்ணயித்தல் வேண்டும்.

(ii) வரும் ஆண்டிற்கான மின் கட்டண வீதத்தை நிர்ணயிக்கையில், வழங்கப்படவேண்டிய உதவித் தொகையை காரணியாக ஏற்றுக் கொள்ள தமிழ்நாடு அரசு விரும்புகிற நேர்வில், அது, தமிழ்நாடு அரசின் முடிவினை நிறைவேற்றுவதற்காக வரும் ஆண்டில் அவசியமாகும் மொத்த ஆதாரத்தினை மதிப்பிடுவதற்கு மின் பகிர்வு உரிமம்தாரர்களுக்கு உத்தரவிடுதல் வேண்டும் மற்றும் அதனை ஆணையத்திற்கும், தமிழ்நாடு அரசிற்கும் ஒவ்வோர் ஆண்டின் நவம்பர் 30–க்குள் தெரிவித்தல் வேண்டும் மற்றும்

(iii) நடப்பு ஆண்டின் நவம்பர் 30ஆம் நாளுக்கு முன்பு அல்லது மின் கட்டண வீத நிர்ணய மனுவுடன் சேர்த்து, வரும் ஆண்டிற்கான மின் கட்டண வீதத்தை நிர்ணயிக்கையில் உதவித் தொகை பொறுத்த தகவல் பெறப்படாதிருக்கும் நேர்வில், ஆணையம், உதவித்தொகையினை கருத்தில் கொள்ளாமல், வரும் ஆண்டிற்கான சில்லறை மின் கட்டணவீதத்தை நிர்ணயிப்பதை தடையின்றிச் செய்யலாம் மற்றும் அதன் பின்பு, ஆணையத்தினால் மின் கட்டணவீதம் நிர்ணயிக்கப்படுகையில், நுகர்வோர் அல்லது நுகர்வோரின் வகையினர் எவருக்கும் தமிழ்நாடு அரசு உதவித்தொகை வழங்கலாம்.

**5. மாநில அரசால் உதவித்தொகை வழங்கப்படும் முறை :**

(i) மின் பகிர்வு உரிமம்தாரர், மாநில அரசு, முன்னதாக உதவித் தொகையை வழங்குவதற்கு உட்பட்டு, எவருக்கு உதவித்தொகை வழங்கவுள்ளதோ அந்த நுகர்வோர் அல்லது நுகர்வோரின் வகையினருக்கு உதவி நிதியளிக்கப்பட்ட மின் கட்டணத்தை விதித்தல் வேண்டும்.

(ii) உதவித்தொகையானது, பின்வரும் உதவித்தொகை வழங்குதல் திட்டத்தின்படி, முன்னதாக ஆணையத்தினால் ஆணையிடப்பட்டவாறு மின் பகிர்வு உரிமம்தாரருக்கு தமிழ்நாடு அரசால் செலுத்தத்தக்கதாகும்.

| | | |
|---|---|---|
| வீட்டு நுகர்வோர் | : | மாதந்தோறும் |
| வேளாண் மற்றும் குடிசைப்பகுதி நுகர்வோர் | : | அரையாண்டுதோறும் |
| பிற நுகர்வோர் | : | காலாண்டுதோறும் |

(iii) தமிழ்நாடு அரசு, மின் பகிர்வு உரிமம்தாரருக்கு, முன்னதாக, ரொக்கமாக உதவித்தொகையை வழங்குதல் வேண்டும். தமிழ்நாடு அரசுக்கு மின் பகிர்வு உரிமம்தாரரிடமிருந்து கொடுபடவேண்டிய தொகை எதற்கும் எதிராக, சலுகை விலையில் அல்லது இலவசமாக மின் வழங்கல் பொறுத்து செலுத்தப்படவேண்டிய உதவித்தொகையை சரிக்கட்டுவதற்கு தமிழ்நாடு அரசு விரும்புமானால், ஆணையத்தின் முன் ஒப்புதல் அளிப்புடன் செய்தல் வேண்டும்.

(iv) மின் பகிர்வு உரிமம்தாரர், காலாண்டுதோறும் ஆணையத்திற்கும், தமிழ்நாடு அரசிற்கும், தமிழ்நாடு அரசிடமிருந்து முன்னதாக கோரப்பட்ட உதவித்தொகை மற்றும் பெறப்பட்ட உதவித்தொகை பற்றிய தகவலை அளித்தல் வேண்டும்.

(v) இந்த ஒழுங்குமுறைவிதிகள் நடைமுறைக்கு வந்த நாளன்று, மின் கட்டண வீதம் பொறுத்து நுகர்வோர் அல்லது நுகர்வோரின் வகையினர் எவராலும் செலுத்தத்தக்க அசல் மற்றும் வட்டி, நிலுவைத்தொகை எதுவும் இருக்குமாயின், மற்றும் அது தமிழ்நாடு அரசால் விட்டுவிடப்படுமாயின், தமிழ்நாடு அரசு, விட்டுவிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அத்தகைய தொகைகளை மின் பகிர்வு உரிமம்தாரருக்கு இழப்பீடாக வழங்கும்.

(vi) தமிழ்நாடு அரசால் விட்டுவிடப்பட்ட மின் கட்டணவீதத்திலிருந்து பெறப்படும் மற்றும் மின் பகிர்வு உரிமம்தாரரின் வரவு செலவுப் புத்தகத்தில் செலுத்தப்படாமல் இருக்கும் வருவாய் நிலுவைகள், இந்த ஒழுங்குமுறைவிதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து ஓர் ஆண்டிற்குள், கூடுதல் உதவித்தொகை விடுவிக்கப்படுவதன் மூலம், தமிழ்நாடு அரசால் தீர்க்கப்படும்.

(vii) மின் பகிர்வு உரிமம்தாரர், நிதியாண்டின், முடிவிலிருந்து ஆறு மாதங்களுக்குள் உள்ளபடியே நுகரப்பட்டதற்காக உள்ளபடியே பெறப்பட்ட உதவித்தொகையைச் சீர் செய்தல் வேண்டும் மற்றும் உதவித்தொகையைச் சரிக்கட்டுவதற்கான உத்தேசத்திட்டத்தை அனுப்புதல் வேண்டும். ஆணையம் இறுதி உதவித் தொகைக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**6. உதவித்தொகை வழங்காமை, பகுதி வழங்குகை அல்லது மிகையான வழங்குகையின் விளைவுகள் :**

(i) 4 (i) ஆம் ஒழுங்குமுறைவிதியின்படி முன்னதாக, ஆணையத்தினால் ஆணையிடப்பட்ட வழங்குகைக் கால அட்டவணைப்படி, உதவித்தொகை பெறப்படாதிருக்கும் நேர்வில், மின் பகிர்வு உரிமம்தாரர், ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட மின் கட்டணவீதத்தை நுகர்வோருக்கு விதித்தல் வேண்டும்.

(ii) மின் பகிர்வு உரிமம்தாரர், நுகர்வோருக்கான பட்டியலிடுகையில், (a) ஆணையத்தினால் நிர்ணயிக்கப்பட்ட மின் கட்டண வீதத்தின்படி செலுத்தத்தக்க தொகை, (b) தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்ட உதவித்தொகை மற்றும் (c) பட்டியல் கால அளவிற்கு நுகர்வோரால் செலுத்தத்தக்க மொத்தத் தொகை ஆகியவற்றை ஒவ்வொரு பட்டியலிலும் தெளிவாகச் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

(iii) உள்ளபடியே நுகர்ந்ததற்கான உதவித்தொகையைச் சீர் செய்த பின்பு, ஆணையத்தால் இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட உள்ளபடியேயான உதவித் தொகைக்குக் குறைவாகத் தமிழ்நாடு அரசால் உதவித் தொகை வழங்கப்பட்டதாகக் காணப்படுமானால், இறுதி உதவித் தொகைக்கான ஆணையத்தின் ஆணைக்குப் பின்பு, அடுத்து விடுவிக்கப்படும் தொகையுடன் சேர்த்து தமிழ்நாடு அரசு அதனை வழங்குதல் வேண்டும். வழங்கப்பட்ட உதவித்தொகையானது மிகையாக இருக்கும் நேர்வில், தமிழ்நாடு அரசு, அதனை அடுத்து விடுவிக்கப்படுவதில் சரிக்கட்டுதல் வேண்டும்.

**7. திருத்தம் செய்வதற்கு அதிகாரம் :**

ஆணையம், தானாக முற்பட்டோ அல்லது எவரேனும் நபரால் அல்லது மின் பகிர்வு உரிமம்தாரரால் அல்லது எவரேனும் நுகர்வோரால் செய்யப்படும் விண்ணப்பத்தின் பேரிலோ, எந்த நேரத்திலும், இந்த ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகள் எவற்றிலும் சேர்க்கலாம், மாற்றலாம், அல்லது அதனை மாற்றியமைக்கலாம் அல்லது திருத்தம் செய்யலாம்.

**8. காப்பு :**

(i) இந்த ஒழுங்குமுறைவிதிகளிலுள்ள எதுவும், நீதியின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கும் அல்லது ஆணையத்தின் நடைமுறையினைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கும் அவசியமாகலாகும் ஆணைகளை பிறப்பிப்பதற்கு ஆணையத்தின் உள்ளுறை அதிகாரத்தினை வரம்பிடுவதாகக் கருதப்படுதல் ஆகாது அல்லது பிறவாறு பாதித்தல் ஆகாது.

(ii) இந்த ஒழுங்குமுறைவிதிகளிலுள்ள எதுவும், சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்க, ஆணையம், பொருளின் அல்லது பொருட்களின் வகையின் சிறப்பு சூழ்நிலைகளின் பொருட்டு மற்றும் எழுத்துவடிவில் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக, அத்தகைய பொருள் அல்லது பொருட்களின் வகை மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையானது அல்லது உகந்தது எனக் கருதுமானால், இந்த ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளில் எதற்கும் மாறுபட்ட நடைமுறையினை ஆணையம் ஏற்றுக் கொள்ளுவதற்குத் தடையாக இருத்தல் ஆகாது.

(iii) இந்த ஒழுங்குமுறைவிதிகளிலுள்ள எதுவும், உட்கிடையாக அல்லது வெளிப்படையாக, சட்டத்தின்படியான அதிகாரம் எதனையும் செலுத்தி எந்தப் பொருள் எதனையும் பொறுத்து ஒழுங்குமுறைவிதிகள் எவையும் இயற்றப்படாதிருக்கிறதோ அந்தப் பொருள் எதனையும் பொறுத்து நடவடிக்கை எடுப்பதற்கு ஆணையத்தினை தடை செய்தல் ஆகாது.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

சென்னை 600 018,
2008 அக்டோபர் 10.

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிவிக்கை எண் TNERC/CGR & E.O. /6-1, 2005 அக்டோபர் 3ஆம் நாளிட்டது)**

*[Letter No. TNERC/AD(L)/F.Notifications/D1395/2008.]*

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

No. VI(2)/783/2008.

2004 ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளையும் தவறான கருத்துக்களையும் நீக்குவதற்காக மேற்சொன்ன ஒழுங்குமுறை விதிகளிலுள்ள ஒழுங்குமுறை விதிகளுக்குத் திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்காக வகைசெய்யும் திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வறையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 42ஆம் பிரிவின் (5), (6), (7) ஆகிய உட்பிரிவுகளுடன் சேர்த்துப்படிக்கப்படும் 181 ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 2004 ஜனவரி 8ஆம் நாளிட்ட அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ. / மி.நு.கு.ம. மற்றும் மி.கு./6–1 இன்படி பிறப்பிக்கப்பட்ட 2004 ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தத்தை குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 பிப்ரவரி 18 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI—பிரிவு 2–இல் வெளியிட்டுள்ளது.

### 2005 ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான (திருத்த) ஒழுங்குமுறைவிதிகள்.

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

(1) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2005ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளர்களுக்கான (திருத்த) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்பெறும்.

(2) இந்த ஒழுங்குமுறைவிதிகள், **தமிழ்நாடு அரசிதழில்** அவை வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. 2004 ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் 3ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்:**

[இதில் இதன் பின்பு 2005ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளர் (திருத்த) ஒழுங்குமுறை விதிகள் என்று குறிப்பிடப்படும்]. 2004 ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளில், 3ஆம் ஒழுங்குமுறைவிதியின் (7) ஆம் உள்-ஒழுங்குமுறைவிதியில் இரண்டாம் வாக்கியத்திற்குப் பதிலாகப் பின்வரும் வாக்கியம் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

“மன்றம் திறம்படச் செயற்படுவதற்காக தலைவர், தம்முடைய அலுவலக இடம், செயலகப் பணியாளர் அமைப்பு மற்றும் பிறவசதிகளைப் பயன்படுத்துதல் வேண்டும். உறுப்பினர்கள் தம்முடைய பதவியின் காரணமாக, தலைவரின் அலுவலக வளாகத்தில் தனிப்பட்ட இடவசதி எதனையும், அல்லது தனிப்பட்ட செயலகப் பணியாளர் அமைப்பு மற்றும் பிற வசதிகள் எவற்றையும் கோருவதற்கு உரிமையுடையவர்கள் ஆகார். மன்றத்தின் உறுப்பினர்கள் அலுவலக வளாகத்தை வழக்கமாகப் பயன்படுத்துவதற்கும் மற்றும் செயலகப் பணியாளர் அமைப்பானது தம்முடைய வழக்கமான பதவிப் பணிகளை ஆற்றுவதற்கும் அசௌகரியம் அல்லது குந்தகம் எதனையும் விளைவிக்காமல், தலைவரின் அலுவலக வளாகத்தையும், செயலகப் பணியாளர் அமைப்பையும் மன்றத்தின் கூட்டங்கள் குறித்த காலத்தில் நடைபெறும் நாட்களில், அக்கூட்டங்களில் கலந்து கொள்ளும் குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும், மற்றும் மேலேயுள்ள நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட செயலகப் பணியாளர் அமைப்பு மன்றத்தின் முடிவுகளை சொல்லப்பட்டு எழுதப்படுவதற்கு மட்டுமே பயன்படுத்தலாம்.

**3. 2004ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறை தீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் 7ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம்:**

மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளின் 7ஆம் ஒழுங்குமுறை விதியின் (8) ஆம் உள்-ஒழுங்குமுறைவிதியின் கடைசியில், பின்வரும் வாக்கியம் புகுத்தப்படுத்துதல் வேண்டும். அதாவது :—

“மன்றத்தின் முடிவுகள், சட்டத்தின், மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றிற்கு இணங்கவும் மற்றும் குறிப்பாக, தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பு மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பு மற்றும் ஆணையத்தின் பணிப்புரைகள் ஆகியவற்றிற்கு இணங்கவும் கண்டிப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் மன்றத்தின் உறுப்பினர்கள் மற்றும் தலைவர், மன்றத்தில் முடிவு எடுக்கையில், வெளிப்படையாகவோ, அல்லது உட்கிடையாகவோ சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது ஒழுங்குமுறை விதிகள் அல்லது தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு அல்லது தமிழ்நாடு மின் பகிர்மான விதித் தொகுப்பு அல்லது ஆணையத்தின் பணிப்புரைகள் ஆகியவற்றிலிருந்து மாறுபடுவதற்கு உரிமை கிடையாது.”

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

சென்னை 600 018,
2008 அக்டோபர் 10.

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(கடித எண் T.N.E.R.C. / DIR (E)/ AD(L)/F CGR F & D E.O. (திருத்தம்) / D.1776/07.)**

*(அறிவிக்கை எண் T.N.E.R.C /CGR F & E.O. / 6-2, 2007 பிப்ரவரி 28 ஆம் நாளிட்டது)*

*[Letter No. TNERC../AD(L)/F.Notifications/D1395/2008.]*

(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

No. VI(2)/784/2008.

2004 ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறை தீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறைவிதிகளைச் செயற்படுத்துவது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளையும் மற்றும் தவறான கருத்துக்களையும் நீக்குவதற்காக மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளிலுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்குத் திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும் மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்காக வகைசெய்யும் திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வறையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 42 ஆம் பிரிவின் (5), (6), (7) ஆகிய உட்பிரிவுகளுடன் சேர்த்துப்படிக்கப்படும் 181 ஆம் பிரிவின் மூலம் அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன் மூலம், 2004 ஜனவரி 8ஆம் நாளிட்ட அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ. / மி.நு.கு.ம. மற்றும் மி.கு./6–1–இன்படி பிறப்பிக்கப்பட்ட (இதன்பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறைவிதி என்று குறிப்பிடப்படும்) 2004 ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளுக்குப் பின்வரும் திருத்தத்தை குறித்துரைத்துள்ளது மற்றும் 2004 பிப்ரவரி 18ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பகுதி VI-பிரிவு 2 (பின்னிணைப்பு)–ல் வெளியிட்டுள்ளது.

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

(1) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2007ஆம் ஆண்டு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின் குறைதீர்ப்பாளர்களுக்கான (திருத்த) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்பெறும்.

(2) இது **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 14 ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம் :**

முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 14 ஆம் ஒழுங்குமுறைவிதியில்,—

''மதிப்பூதியம்'' என்ற சொல்லுக்குப் பதிலாக ''சம்பளம்'' என்ற சொல் அமைக்கப்படுதல் வேண்டும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

சென்னை 600 018,
2008 அக்டோபர் 10.

## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./ ஒழுங்குமுறை விதிகள் /F-F/4/2-2, 2008 ஜுன் 3ஆம் நாளிட்டது)**

*[Letter No. TNERC/AD(L)/F.Notifications/D1395/2008.]*

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

No. VI(2)/785/2008.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 86ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (g) கூறின் மூலம் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி, 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறை விதிகளை, 2004 பிப்ரவரி 18ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழில்* குறித்துரைத்துள்ளது மற்றும் அறிவிக்கை செய்துள்ளது என்பதாலும்,

மற்றும் முன்னர் தனியாக உள்ளடங்காத ஒருசில அலுவற் பணிகள் பொறுத்து கட்டணங்கள் வசூலிப்பதற்காக வகை செய்வது குறித்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்கும்பொருட்டு மேற்சொன்ன ஒழுங்குமுறை விதிகளுக்குத் திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியம் என்று கருதுவதாலும் மற்றும் அத்திருத்தங்கள் முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 86ஆம் பிரிவின் (1)ஆம் உட்–பிரிவின் (g) கூறின் மூலம் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், (இதன் பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறை விதிகள் என்று குறிப்பிடப்படும்) 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் – கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறை விதிகளுக்குப் பின்வரும் திருத்தங்களைச் செய்கிறது.

## 2008ஆம் ஆண்டு கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் (திருத்த) ஒழுங்குமுறை விதிகள்

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்:**

(i) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சாரக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் (திருத்த) ஒழுங்குமுறை விதிகள் என்று வழங்கப்பெறும்.

(ii) இவை, 2008 ஜுன் 3 அன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 3ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்:**

முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 3ஆம் ஒழுங்குமுறை விதியின் (I) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில், ''அதற்குரிய இணைப்புப்பட்டியல்'' என்ற சொற்றொடர் விட்டு விடப்படுதல் வேண்டும்.

**3. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 6ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம்:**

முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 6ஆம் ஒழுங்குமுறை விதியில்,–

(i) ''மற்றும் (d) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட பல்வகைப்பட்டவை'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''மற்றும் (d) கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்ட பல்வகைப்பட்டவை'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(ii) மேலேயுள்ள கூறு (i) இல் திருத்தப்பட்டவாறான மேற்சொன்ன சொற்றொடருக்குப் பின்பு, ''அட்டவணை'' என்ற சொல், ''எண், விண்ணப்பத்தின் / மனுவின் தன்மை, கட்டணங்கள்'' என்ற சொற்றொடருக்கு மேலே புகுத்தப்படுதல் வேண்டும்.

(iii) மேற்சொன்ன அட்டவணையில்,–

(a) இனம் எண். 3 மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பின்பு பின்வரும் புதிய இனம் மற்றும் அது தொடர்பான பதிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன–

| | |
|---|---|
| **3–A:** ஆணையத்தினால் ஒப்புதலளிக்கப்படாத மின் வாங்குகை உடன்பாட்டுப்பத்திரத்தில் திட்டங்களின் மூலதனச் செலவினை தீர்மானித்தல். | மெகாவாட் (MW) ஒன்றுக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ.2,000/– |

(b) இனம் 7 மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பின்புபின்வரும் புதிய இனம் மற்றும் அது தொடர்பான பதிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன :–

| | |
|---|---|
| **"7–A:** சட்டத்தின் 86 (I) (f) பிரிவின்படி உரிமம்தாரர்கள் மற்றும் மின் உற்பத்தி நிறுமனங்களுக்கிடையேயான பூசல்களை நீதிமுறையில் தீர்மானிப்பதற்காக. | ரூ. 10,000/– |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**இரா. பாலசுப்பிரமணியன்,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

சென்னை 600 018,
2008 அக்டோபர் 10.

PRINTED AND PUBLISHED BY THE PRINCIPAL SECRETARY TO GOVERNMENT AND
COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU